# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்

## பாடம் 8: மகிமையான ராஜ்யம்

**1இராஜாக்கள் 3:5-15; 10:1-29**

### நடந்த கதை . . .

இஸ்ரவேலின் புதிய ராஜாவாக சாலொமோன் பதவியேற்றார். பிறகு, ஆண்டவர் கனவில் தோன்றி, ‘‘நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்’’ என்று அவரிடம் கேட்டார். 1இராஜா 3:5. அந்த வாலிப அரசன் தனக்குப் பணத்தையோ, புகழையோ, நீடித்த ஆயுளையோ கேட்கவில்லை. மாறாக, தேவ மக்களை நியாயமாக ஆட்சிசெய்ய ஞானம் கேட்டார். தாழ்மையாக, முழுமனதுடன் கேட்டதால் சாலொமோனுக்கு ஆண்டவர், எல்லா மனிதர்களைக் காட்டிலும் அளவுக்கடங்கா ஞானத்தையும் பகுத்தறிவையும் கொடுத்தார். பணம், புகழ், நீடித்த ஆயுள் போன்றவற்றாலும் ஆசீர்வதித்தார்.



சாலொமோனின் ஆட்சியின்போது, இஸ்ரவேலில் எப்போதும் இல்லாத சமாதானமும் செழிப்பும் காணப்பட்டது. அவர் காலத்தில் விலையுயர்ந்த உலோகங்கள் எருசலேமில் மலிந்திருந்தன; வெள்ளியானது சாதாரணக் கற்களைப் போல் எண்ணப்பட்டது. 1இராஜா 10:27. பளிங்காலும் பொன்னாலும் தேவனுக்கென்று அற்புதமான ஓர் ஆலயத்தை சாலொமோன் கட்டியிருந்தார். மேலும், ஒரு ஆடம்பர மாளிகையையும், தன் இரதங்களும் குதிரை வீரர்களும் இருப்பதற்கான பட்டணங்களையும் கட்டினார். ஒவ்வொரு பட்டணத்திலும் அபூர்வமான மரங்களை நட்டு, பூந்தோட்டங்களை உண்டாக்கினார். மன்னர்களும், பிரபுக்களும், அரசக்குலத்தவர்களும் பரிசுகளோடு வந்து, சாலொமோனைப் பார்த்துச் சென்றனர். சாலொமோனின் இருதயத்திலே தேவன் அருளிய அற்புத ஞானத்தைக்குறித்துக் கேட்க ஏங்கினார்கள். 1இராஜா 10:24.

சாலொமோனை வந்து பார்த்த பல அரசகுலத்தினர்களில் சேபா எனும் தூரதேசத்து ராஜஸ்திரீயும் ஒருவள். அவள் அழகிலும் செல்வத்திலும் சிறந்தவள். சாலொமோனைப்பற்றிய விஷயங்கள் உண்மையா என்று தானே பார்க்க விரும்பினாள். சேபாவின் ராஜஸ்திரீ கடினமான பல கேள்விகளால் சாலொமோனைச் சோதித்தாள்; அவர் சொன்ன அறிவுக்கூர்மையான பதில்கள் அவளை மலைக்கச் செய்தன. திரும்பின பக்கமெல்லாம் பிரமிப்பு!

ஆனாலும், தேவன் உங்களுக்காக ஆயத்தம்செய்திருக்கும் மகிமையான ராஜ்யத்தோடு ஒப்பிடும்போது, அந்த இஸ்ரவேல் ராஜ்யம் ஒன்றுமே இல்லை.

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

### 1. இயேசு தம்முடைய பிள்ளைகளுக்கு என்ன வாக்குரைத்திருக்கிறார்?

**யோவான் 14:2.** *என் பிதாவின் வீட்டில் அநேக ______________________ உண்டு; … ஒரு ______________________ உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்.*

### 2. இயேசு ஆயத்தம்செய்யும் அந்த இடத்தைப்பற்றி நாம் அறிந்திருப்பது என்ன?

**ஏசாயா 65:17.** *இதோ, நான் ____________ வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்.*

**எபிரெயர் 11:16.** *அவர்களுக்கு ஒரு ____________ ஆயத்தப்பண்ணினாரே.*

**மத்தேயு 5:5.** *சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ______________ சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.*

**ஏசாயா 65:21.** ______________ *கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள்.*

**குறிப்பு:** அற்புதத்திலும் அற்புதம்! தேவன் தம்முடைய மக்களுக்காகப் புதிய வானங்களையும் புதிய பூமியையும் ஒரு பரிசுத்த நகரத்தையும் ஆயத்தம்பண்ணியிருக்கிறார். இயேசு கட்டியுள்ள நகரத்தில் நீதிமான்கள் ஒரு மகிமையான வாசஸ்தலத்தைச் சுதந்தரிக்கப் போகிறார்கள். யோவான் 14:2. மேலும், புதிய பூமியில் அவர்கள் தங்களுக்கென்று ஒரு மகிமையான தேசத்தையும் கட்டப்போகிறார்கள். ஏசாயா 65:21.

### 3. அந்தப் பரிசுத்த நகரம்பற்றி வேறு என்ன விபரங்களை அறிந்துகொள்ளலாம்?

**வெளிப்படுத்தல் 21:16.** *அந்த நகரம்* ______________________, *… அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான்; அது* __________________ __________________ *அளவாயிருந்தது. அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது.*

**வெளிப்படுத்தல் 21:2.** *யோவானகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று* ________________________ *இறங்கிவரக்கண்டேன்.*

**வெளிப்படுத்தல் 21:10,12.** *எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டுத் தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதை எனக்குக் காண்பித்தான் … அதற்குப் பெரிதும் உயரமுமான மதிலும் …* ____________________ *வாசல்களும் இருந்தன.*

**வெளிப்படுத்தல் 21:18.** *அதின்* _______ ____________________ *கட்டப்பட்டிருந்தது.*

**வெளிப்படுத்தல் 21:21.** *நகரத்தின் வீதி தெளிவுள்ள* ___________________ *சுத்தப் பொன்னாயிருந்தது.*

**குறிப்பு:** பரிசுத்த நகரம் சதுரமாயிருந்தது. அதன் சுற்றளவு 12,000 ஸ்தாதி அல்லது 1,500 மைல். (ஒரு மைல் தூரத்தில் எட்டில் ஒரு பங்குதான் ஒரு ஸ்தாதி. பரலோகத்திலிருந்து புதிய பூமிக்கு அது இறங்கிவருகிறது; ஒலிவ மலை இருக்கிற இடத்திலே அது வைக்கப்படும். சகரியா 14:4. அதின் 12 வாசல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவித விலையேறப்பட்ட கல்லால் செய்யப்பட்டிருக்கின்றது. வெளி 21:21. வச்சிரக்கல்லாலான அதின் மதில்கள் 144 முழம் அல்லது 216 அடி உயரமாயிருந்தது (வெளி 21:17. ஒரு முழம் = 18 அங்குலம்).

### 4. நகரத்தின் தண்ணீர், உணவுபற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறது?

**வெளிப்படுதல் 22:1.** ____________________ *தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி(யை) எனக்குக் காண்பித்தான்.*

**வெளிப்படுதல் 22:2.** *நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத் தரும்* __________*விருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்.*

**குறிப்பு:** வற்றாத, பளிங்கைப்போல, சுத்தமான தண்ணீருள்ள ஒரு நதி தேவனுடைய சிங்காசனத்தி லிருந்து புறப்பட்டு ஓடும். ஜீவவிருட்சமானது மாதந்தோறும் வெவ்வேறு விதமான கனியைக் கொடுக்கும். அந்த அற்புதக் கனியும் அதின் இலைகளும் மரணத்தைத் தடுத்து, நித்திய ஜீவனைத் தரக்கூடியவையாக இருக்கும். மேலும், தேவனுடைய பரிசுத்தவான்கள் தங்களுடைய தேசத்தில், தாங்கள் நாட்டினவற்றிலிருந்து உணவு பெற்றுக்கொள்வார்கள். ஏசாயா 65:21. பாவம் இவ்வுலகிற்குள் பிரவேசிக்குமுன் தேவன் கொடுத்த உணவான தானியங்கள், பழங்கள், கொட்டைகள் போன்றவைதாம் தேவமக்களின் உணவாக இருக்கும். ஆதியாகமம் 1:29,31. ருசியானது தித்திப்பிலும் தித்திப்பாக இருக்கும்; ஊட்டச்சத்து பரிபூரணமானதாக இருக்கும்.

### 5. பூமியின் வாழ்க்கையைவிட பரலோகத்தின் வாழ்க்கை எவ்வாறு வித்தியாசமாக இருக்கும்?

**ஏசாயா 35:5.** ____________________ *கண்கள் திறக்கப்படும்.*

**ஏசாயா 35:5.** ____________________ *செவிகள் திறவுண்டுபோம்.*

**ஏசாயா 35:6.** *அப்பொழுது முடவன் மானைப்போல்* ____________________; *ஊமையன் நாவும்* ____________________.

**ஏசாயா 65:25.** *அவைகள் (மிருகங்கள்)* __________________________, *கேடுண் டாக்குவதுமில்லை.*

**ஏசாயா 11:6.** *ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும் ... ஒரு* ____________________ *அவைகளை நடத்துவான்.*

**ஏசாயா 35:1.** *வனாந்தரமும் ... புஷ்பத்தைப்போலச்* ____________________.

**ஏசாயா 33:24.** __________________________ *என்று நகரவாசிகள் சொல்வதில்லை.*

**வெளிப்படுத்தல் 21:4.** *இனி* ____________________, *துக்கமுமில்லை, அலறுதலு மில்லை.*

### 6. பரிசுத்தவான்கள் எப்படிப்பட்ட சரீரங்களைத் தரித்திருப்பார்கள்?

**பிலிப்பியர் 3:20,21.** *கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து ... நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய* ______________________ *சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப் படுத்துவார்.*

### 7. இயேசு சரீரத்தில் வந்திருந்தாரா, அல்லது ஆவியாக வந்திருந்தாரா?

**லூக்கா 24:39.** *நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி, எனக்கு* ____________________ *எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே.*

**குறிப்பு:** இயேசு உயிர்த்தெழுந்த பிறகு, மாம்சத்தாலும் எலும்பாலும் ஆன, தொட்டு உணரத்தக்க, உண்மையான சரீரத்தைப் பெற்றிருந்தார். இயேசு திடீரெனத் தம் சீடர்களுக்குக் காட்சியளித்த போது, அவரை ஓர் ஆவியென்று முதலில் நினைத்தார்கள்; அவரைத் தொட்டு, உணர்ந்து அவர் சாப்பிடுவதைப் பார்த்த பிறகுதான் (லூக்கா 24:40–43), அவர் சரீரத்தோடு இருந்ததைப் புரிந்து கொண்டார்கள். லூக்கா 24:40–43. நாற்பது நாட்களுக்குப்பிறகு, இயேசு அவர்களை பெத்தானியாவுக்கு அழைத்துச்சென்றார்; அங்கு அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டார். லூக்கா 24:50,51. சீடர்களுக்குக் காட்சியளித்த தூதர்கள் அவர்களிடம், “இந்த இயேசு வானவர் (மாம்சமும் இரத்தமும் உடைய) எப்படி உங்கள் கண்களுக்குமுன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்” என்று சொன்னார்கள். அப் 1:11. அவர் மனிதனாக வந்ததிலிருந்து, மனித இனத்தின் அங்கமாகிவிட்டார்; தேவனாகவும் இருக்கிறார்.

### 8. நமக்குத் தைரியமூட்டும் வேறு என்ன வாக்குத்தத்தம் காணப்படுகிறது?

**அப்போஸ்தலர் 3:20,21.** *இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பு(வார்) ... எல்லாம்* ________________________ *தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்.*

**குறிப்பு:** தேவனுக்கு ஸ்தோத்திரம்! பாவத்தின் வருகையால் இழந்துபோன மகிமைவாய்ந்த ஒவ்வொன்றும் தேவனுடைய புதிய ராஜ்யத்தில் திரும்பக் கிடைக்கப்போகிறது. மக்கள் அனை

வரும் உண்மையாகவே ஒருவரை ஒருவர் நேசித்து, நம்பி, ஆதரவாக இருப்பார்கள். அதன் விளைவாக, இனி வன்முறை இருக்காது (ஏசாயா 60:18); மறுதலிப்பும், நிந்தையும், நம்பிக்கைத் துரோகமும், நேர்மையின்மையும், அவதூறுப்பேச்சும், பாதுகாப்பற்ற உணர்வும், மன அழுத்தமும், ஆபத்தும், ஏமாற்றமும், தலைவலியும் இருக்காது. சந்தோஷத்தோடும், மகிழ்ச்சியோடும், மன நிறைவோடும் நித்தியகாலமும் பரிபூரணமாக வாழலாம்.

### 9. இந்த வாழ்க்கையில் மக்களைத் துன்புறுத்தும் நினைவுகள் பரலோகத்திற்கும் வந்துவிடுமா?

**ஏசாயா 65:17.** *முந்தினவைகள் ________________ நினைக்கப்படுவது மில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை.*

**குறிப்பு:** ‘மனதில் தோன்றுவது இல்லை’ என்று சொல்வதைவிட, ‘மனதில் அசைவாடுவதில்லை’ என்று சொல்வதுதான் சரியாக இருக்கும். பூமியின் வேதனைகள் எதுவும், பரலோகத்திலுள்ள பரிசுத்தர்களைத் துக்கப்படுத்துவதில்லை என்று ஆண்டவர் இங்கு வாக்குரைக்கிறார்.

### 10. பூமியிலிருந்து சென்றவர்கள் தேவனுடைய புதிய ராஜ்யத்தில் ஒருவரை ஒருவர் அடையாளங்காண முடியுமா?

**1கொரிந்தியர் 13:12.** *அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே ____________________________.*

**குறிப்பு:** நம்முடைய தோற்றம், நடை, பாணி, பேச்சு போன்றவற்றை வைத்து நாம் ஒருவரை ஒருவர் உணர்ந்துகொள்வோம். ஒருவரை ஒருவர் பகுத்தறியும் நம் திறமைகள் பரலோகத்தில் மேம்படும். முழுக்குடும்பமும் அற்புதவிதத்தில் இணைகிற ஓர் இடமாகப் பரலோகம் இருக்கும்.

### 11. வரப்போகும் தம்முடைய ராஜ்யம்பற்றி வேறு என்ன ஆச்சரியமான வாக்குத்தத்தங்களை தேவன் கொடுக்கிறார்?

**ஏசாயா 35:10.** *கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ______________________ பாடி, சீயோனுக்கு வாருவார்கள்.*

**சங்கீதம் 16:11.** *நித்திய __________________ உண்டு.*

**சகரியா 8:5.** *நகரத்தின் தெருக்களிலே விளையாடுகிற ஆண்பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் அதின் வீதிகளில் __________________ என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*

**ஏசாயா 40:31.** *அவர்கள் ஓடினாலும் _________________________, நடந்தாலும் ______________________.*

**ஏசாயா 40:31.** *கழுகுகளைப்போலச் ________________ அடித்து எழும்புவார்கள்.*

**குறிப்பு:** பரிசுத்தவான்கள் ஒளியைவிட வேகமாக, தூதர்களைப்போல் பறந்துசெல்லமுடியும். அவர்கள் சகலத்தையும் சுதந்தரித்துக் கொள்வதால் (வெளி 21:7), மற்ற உலகங்களுக்குக் கணப் பொழுதில் செல்லலாம். தேவன் சிருஷ்டித்த, விழுந்துபோகாத பிற உலகங்களும் இருப்பதாக வேதாகமம் சொல்கிறது. யோபு 1:6; எபிரெயர் 1:2; 11:3.

### 12. தேவனுடைய புதிய ராஜ்யத்தை விவரிக்க வார்த்தைகள் போதுமா?

**1கொரிந்தியர் 2:9.** *தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணின வைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய ____________________ தோன்றவுமில்லை.*

**குறிப்பு:** நானும் நீங்களும் இப்போது இருக்கிற நிலையில் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காக ஆயத்தம்பண்ணினவற்றைக் கற்பனைசெய்வது கடினம். பரலோகத்தின் பேரின்பத்தையும் சந்தோஷத்தையும் எந்த வார்த்தையாலும், எண்ணத்தாலும், கற்பனையாலும் உள்ளபடியே வெளிப்படுத்திக் காட்டமுடியாது. இந்தப் பூமியில் நாம் எப்படிப்பட்ட பாடுகளை அனுபவித்து வந்தாலும், பரலோகத்திற்குச் சென்றால் பூமியின் பாடுகளெல்லாம் ஒன்றுமில்லை என்பது புரிந்துவிடும். ரோமர் 8:18.

**13. தேவனுடைய புதிய ராஜ்யத்தின் உச்சக்கட்டப் பரிசு என்ன?**

**வெளிப்படுத்தல் 21:3.** *தேவன்தாமே அவர்களோடே ________________ இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்*

**குறிப்பு:** இதை நம்புங்கள். ஆச்சரியத்தில் மூழ்கிவிடுவீர்கள். புதிய பூமியில் தேவன்தாமே தம்முடைய மக்களோடு வாசஞ்செய்வார். இதன் மகிமைக்கும் பேரின்பத்திற்கும் வேறெதையும் ஒப்பிடமுடியாது

**14. தேவனுடைய பரலோக ராஜ்யத்திற்குள் எப்படிப்பட்டவர்கள் செல்ல முடியாது?**

**வெளிப்படுத்தல் 21:27.** ______________________ *அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை*

**வெளிப்படுத்தல் 21:7.** ____________ *கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்.*

**குறிப்பு:** பாவம் தீட்டுப்படுத்துகிறது; பரலோகத்தினுள் அது நுழையமுடியாது. நுழைந்தால், மீண்டும் கலகத்தைத் துவங்கிவிடும். (சிறப்பு ஆராய்ச்சியில் 'தேவ ராஜ்யம்' எனும் தலைப்பின் கீழுள்ளதை வாசியுங்கள்).

**15. என்னில் பாவமிருக்கிறதே, நான் என்ன செய்யலாம்?**

**1யோவான் 1:9.** *நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச்* __________________ *அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.*

**குறிப்பு:** என்னுடைய பாவங்களை மன்னிக்கும்படி நான் இயேசுவிடம் கேட்கும்போது, அவர் என்னை மன்னித்து, என் பாவங்களைச் சுத்திகரித்து, என்னைத் தம் பிள்ளையாக்குகிறார்.

**16. இம்மையிலும் மறுமையிலும் வெற்றிகரமான வாழ்க்கையைப் பெற்றுக் கொள்ள இயேசு சொன்ன வழி என்ன?**

**மத்தேயு 6:33.** *முதலாவது தேவனுடைய* ________________________ *அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.*

**குறிப்பு:** 'உனக்கு என்ன வேண்டும்?" என்று தேவன் கேட்டபோது, இதைத்தான் சாலொமோன் செய்தார். தேவனுடைய ராஜ்யமும் அவருடைய நீதியும்தான் அவருடைய சிந்தையில் முதலில் தோன்றின. அதன் பிரதிபலனாக, ஒரு மகிமையான ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றார். நாமும் முதலில் தேவனுடைய ராஜ்யத்தைத் தேடும்போது, நமக்கும் இப்படி நடக்கும்.

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

பூமியின் நிகழ்வுகள் எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதை உணர்ந்து உங்கள் வாழ்க்கையை முற்றிலுமாக தேவனிடம் அர்ப்பணிப்பீர்களா?

**பதில்:** ______________________________

# துணைப்பகுதி

***மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.***

## தேவனுடைய ராஜ்யம்

தொடர்ந்து யுத்தத்தில் ஈடுபட்டு வரும் இரு அரசாங்கங்களைப்பற்றிய பதிவுதான் வேதாகமம். அதில் ஒன்று, தேவனுடைய ராஜ்யம்; இன்னொன்று, சாத்தானுடைய ராஜ்யம். தேவனுடைய ராஜ்யத்தை மையப்படுத்தியே இயேசு பிரசங்கம்பண்ணிவந்தார். புதிய ஏற்பாட்டில் மட்டும் 100 முறை தேவனுடைய ராஜ்யம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது; பெரும் பாலும் இயேசுவின் உவமைகளில்தாம் அவை சொல்லப்பட்டுள்ளன. **அகநிலை அரசு**, **புறநிலை அரசு** என்று தேவனுடைய ராஜ்யம் இரண்டுவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளதாக இயேசு போதித்தார்.

அகநிலை பரலோக ராஜ்யத்தில், குடிமக்களின் மனதில் தேவன் அரசாளுவார். மன மாற்றத்திற்குமுன் நம் இதய சிங்காசனங்களை சாத்தானும், பாவமும், சுயமும் நிறைத்திருக் கும். இயேசுவின் பாவமன்னிப்பையும் வல்லமையையும் ஏற்றுக்கொண்ட பிறகு, அந்த அடிமைத்தனம் உடைக்கப்பட்டது. அதனால்தான், 'நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத் திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது' என்று பவுல் சொல்கிறார். ரோமர் 6:12, 14. 'நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே' என்று இயேசுவும் சொன்னார். லூக்கா 11:20.

ஒருவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதுமே தேவனுடைய அகநிலை ராஜ்யத்தின் பிரஜை ஆகிவிடுகிறார். அதனால்தான் 'தேவனுடைய ராஜ்யம் சமீபித்திருக்கிறது' என்று பிரசங்கித்து, மக்களைத் துரிதப்படுத்தியவாறு இயேசுவும் யோவான் ஸ்நானனும் தங்கள் ஊழியத்தை ஆரம்பித்தார்கள். மத்தேயு 3:2; 4:17. 'சமீபித்திருக்கிறது' என்றால் 'இப்போது கிடைக்கிறது' அல்லது 'கைக்கு எட்டுகிறது' என்று அர்த்தம். 'தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படு கிறதற்கும் ஏதுவிராது; இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே' லூக்கா 17:20,21. ஒருவர் ஞானஸ்நானம்பெற்றதுமே சாத்தானின் அந்தகார ராஜ்யத்திலிருந்து அவர் விலகி, தேவனுடைய ஒளியின் ராஜ்யத்தில் சேர்கிறார்.

கிறிஸ்துவை உண்மையாய்ப் பின்பற்றும் ஒவ்வொருவரும், தேவனுடைய ராஜ்யத்தி லிருந்து இந்த உலகத்திற்குத் தூதுகொண்டு செல்பவராக இருக்கிறார். அயல்நாட்டுத் தூதர்கள் பெரும்பாலும் வேறு மொழியில் பேசுவார்கள்; வேறு உடைகளை அணிந்திருப் பார்கள்; வேறு உணவுவகைகளைச் சாப்பிடுவார்கள்; வேறுவகையான பணம் வைத்திருப் பார்கள்; வேறு பழக்கவழக்கங்களைக் கொண்டிருப்பார்கள்; அதேபோல, கிறிஸ்துவின் தூதுவர்களாகிய நாம் நம் உணவாலும், பேச்சாலும், உடையாலும், நாம் செலவிடுகிற நேரத்தாலும், பணத்தாலும் **நம் ஆண்டவரின் ராஜ்யத்தைச் சரியாகப் பிரதிபலிக்கக் கவனத்தோடு இருக்கவேண்டும்**.

இந்தப் பாடத்தில் நாம் பார்த்தபடி வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள தேவனுடைய புறநிலை ராஜ்யத்தை தேவபிள்ளைகள் ஒருநாளில் சுதந்தரித்துக்கொள்வார்கள். 'உம்முடைய ராஜ்யம் வருவதாக' என்று ஆண்டவருடைய ஜெபத்தில் சொல்லப்படும் இந்த ராஜ்யத்தைக் காணவே நாம் ஏங்குகிறோம். வெளி 20 இல் சொல்லப்படும் யுத்தத்திற்கும், ஆயிர வருட அரசாட்சியின் நியாயவிசாரணைக்குப் பிறகுதான் தேவனுடைய புறநிலை ராஜ்யம் முழுமையாகவும் இறுதியாகவும் ஸ்தாபிக்கப்படும்.

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com